**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்றக்கூட்டம்**
**நாள். 31.07.2019 புதன்கிழமை நேரம் : காலை 10.00 மணி**

---

## நகர்மன்றக்கூட்டம் : நாள். 31.07.2019

**மன்றப்பொருள்: 1**

இந்நகராட்சி பொதுச்சுகாதார வாகனம் எண். டி.என்.58 ஏ.டபுள்யூ.3247–க்கு தகுதிச்சான்று 27.7.2019 உடன் முடிவடைகிறது. மேலும், 2019–20–ம் ஆண்டிற்கு தகுதிச்சான்று பெற வாகனத்தின் ஆயில் சர்வீஸ், பெயிண்டிங் வேலை, வீல் Hub கிரீஸ்சிங் மற்றும் இதர பழுது வேலைகள் செய்து RTO அலுவலகத்தில் தகுதிச்சான்று பெற ஏற்படும் உத்தேச செலவு தொகை ரூ.62,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு:–**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி வாகன பழுது நிக்கம் செய்து தகுதிச்சான்று பெற மன்றம் அனுமதிக்கலாம்.

---

**மன்றப்பொருள்: 2**

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கூட்ட அறிக்கையின் படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்கள் உத்தரவின்படியும் உசிலம்பட்டி நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகள், கடைகள், வர்த்தக நிறுவனங்கள், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்ட வேண்டி உள்ளதால் மழைநீர் சேகரிப்பு ஸ்டிக்கர் எண்ணிக்கை 15,000 விநியோகம் செய்த ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ் நிறுவனத்திற்கு தொகை ரூ. 52,500/– வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலகக்குறிப்பு:–**
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் எற்கலாம்.
(ந.க.எண். 957/2014/எச்.1)

---

**மன்றப்பொருள்: 3**

இந்நகராட்சி பொதுச்சுகாதார வாகனம் TN-58 P-1272 டைனமோ மைக்ரோ ரோட்டர், கட்டவுட்டர், பேரிங் பல்பு ஒல்டர், பேட்டரி ஜார்ஜ் முதலிய பழுது வேலைகள் அஜித்தா ஆட்டோ எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஷாப் உசிலம்பட்டி அவர்களிடம் பழுது நீக்கம் செய்யப்பட்டு அதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 3,650/– ( ரூபாய் மூவாயிரத்து அறநூற்று ஐம்பத் மட்டும்) திரு. அ.துரைப்பாண்டி, ஓட்டுநர் அவர்கள் தனது சொந்த செலவில் மேற்கொண்டது மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:–**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி செலவுகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 300/2013/எச்.1)

---

**மன்றப்பொருள் :4**

காஞ்சிபுரம் நகராட்சி அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோவில் திரவிழா பணிகள் மேற்கொள்வதற்கு உசிலம்பட்டி நகராட்சியில் 10 துப்புரவு பணியாளர்கள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதத்தின்படி காஞ்சிபுரம் நகராட்சி அனுப்பி வைக்கவும், அவர்களுக்கு தேவைப்படும் பயண முன்பணத்தொகை ரூ. 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) துப்புரவு பணி மேற்பார்வையாளர் திரு. அ.சங்கள் அவர்களுக்கு முன்பணமாக வழஙகவும் அப்பணி முடிந்த பின்னர் பட்டியல் சரிக்கட்டல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக்குறிப்பு**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 12353/2019/பி1)

---

**மன்றப்பொருள் :5**

இந்நகராட்சியின் 2018–19–ம் ஆண்டுக்கு வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழஙகல் நிதிகளுக்கு ஆண்டுக்கணக்கு தயார் செய்யும் பொருட்டு தனியர் ஆண்டுக்கணக்கு ஆலோசகர் திரு. எஸ்.எஸ்.சேதுரஜ் அவர்களுக்கு கட்டணத்தொகை ரூ. 33,000/– (ரூபாய் முப்பத்து மூன்றாயிரம் மட்டும்) வருவாய் நிதியில் இருந்து செலுத்தலாம். மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.2350/2018/பி1)

---

**மன்றப்பொருள் :6**

உசிலம்பட்டி நகராட்சியில் மழைநீர் சேகரிப்பு குபவின் ஆய்வு, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் ஆய்வு மற்றும் மழைநீர் சேகரிப்பு மரம் நடும் விழா ஆகிய ஆய்வுகளுக்கு எடுக்கப்பட்ட புகைப்படஙகளுக்கு செலவு செய்த தொகை ரூ. 10,990/–யை திரு. பி.நாகராஜன் என்பவருக்கு வழஙகியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக்குறிப்பு**

1). மன்றம் அனுமதிக்கலாம்.
2).மேற்கண்ட பணியை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)–ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

---

**மன்றப்பொருள்:7**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் தனியார் மூலம் துப்புரவு பணியை 25 நபர்கள் கொண்டு மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 24.7.2019–ம் தேதி புதன்கிழமை இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன இதன் விபரம்

| | | |
|---|---|---|
| 1 | திரு. பத்மநாபன், த/பெ. மனோகரன், வார்டு–12, 9/7ஏ, மொக்கராஜ் தெரு, அன்னம்பாரிபட்டி, உசிலம்பட்டி. | ஒரு துப்புரவு பணியாளர்களுக்கு தினக்கூலி EST, EPF, LIC சீருடை மற்றும் உபகரணங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 495 என்றும் |
| 2 | திரு. கா. ஹரிஹரன் த/பெ. காசிமாயன், வார்டு–10, இரத்தினசாமித்தேவர் தெரு, உசிலம்பட்டி. | ஒரு துப்புரவு பணியாளர்களுக்கு தினக்கூலி EST, EPF, LIC சீருடை மற்றும் உபகரணங்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 525 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.பத்மநாபன் த/பெ.மனோகரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், மேலும், பேச்சுவார்த்தைக்கு அழைத்த போது விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்ததையும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ம.பத்மபநாபன் த/பெ. மனோகரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று 1.8.2019 முதல் 3 ஆண்டுகளுக்கு வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.களண். 930/2018/எச்.1)

---

**மன்றப்பொருள்:8**

இந்நகராட்சி பொதுச்சுகாதார பிரிவில் கிருமி நாசினியாக பயன்படுத்தப்பட்டு வரும் சுண்ணாம்புத்தூள் மற்றும் பிளிச்சிங் பவுடர் தற்போது இருப்பு இல்லாத காரணத்தினால் சுண்ணாம்புத்தூள் 5000 கி.கி. மற்றும் பிளிச்சிங் பவுடர் 200 கி.கி. தேவைப்படுவதால் மேற்கண்ட கிருமி நாசினிகளை விநியோகம் செய்த ஸ்ரீ சபரீஸ் டிரேடர்ஸ் மதுரை நிறுவனத்திற்கு தொகை ரூ. 1,13,000/–யை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்கண்ட செலவினத்தை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு (15)–ன்கீழ் மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 2376/2012/எச்.1)

---

**மன்றப்பொருள்:9**

உசிலம்பட்டி நகராட்சியில் மொத்தம் 1460 எண்ணம் தெருமின் விளக்குகளை பராமரிப்பு பணிக்கு தேவையான மின் உபகரணங்களை விநியோகம் செய்யும் பணிக்கு ரூ. 7.80 இலட்சத்திற்கு மன்ற தீர்மான எண். 18, நாள். 30.6.2019 அனுமதி பெற்றதன் அடிப்படையில் 30.7.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). M/s. மகாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோலர்ஸ் என்பவர் மதிப்பீட்டை விட 0.59 சதவிகிதம் குறைவு

2). M/s. முகேஷ் மார்க்கெட்டிங் என்பவர் மதிப்பீட்டை விட 1.44 சதவிகிதம் அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. மகாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோலர்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. மகாவீர் எலக்ட்ரோ கன்ட்ரோலர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

---

**மன்றப்பொருள்:10**

நகராட்சி பகுதிகளில் விளம்பரம் செய்வது தொடர்பாக வரப்பெற்ற அரசாணை மற்றும் சுற்றறிக்கைகள் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1). Circular Roc.No. 2868/18 TP2, Dt: 14.02.2019

2). G.O.(4D) No.2, MAL&WS (MC1) Dt: 05.06.2018

3). Gazette Dt: 16.07.2018 Part IV Section-2

4). G.O.No. 15,16 & 17 dt: 31.01.2019

5). Gazette copy Dt: 31.01.2019 Part III Section 1(a)

**அலுவலக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1199/2018/எப்.1)

---

**மன்றப்பொருள்:11**

உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலைய வளாகத்திற்குள் உள்ள ஓ.எச்.டி. லிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் திரவ குளோரின் கலக்கும் மோட்டார் பழுதடைந்துள்ளது. மேலும், இப்பணி குடிநீர் பணி என்பதால் உடனடியாக பழுது நீக்கம் செய்யும் பொருட்டு புதியதாக பம்பு மற்றும் பேனல் போர்டு வாங்க உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 1.60 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கான செலவை குடிநீர் விநியோக நிதியிலிருந்து வழங்கலாம்.

**<u>மன்றப்பொருள்:12</u>**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்கு புதியதாக HP Laser Jet MFP m43xservice பிரிண்டர் 4 எண்ணம் புதியதாக வாங்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 3.70/–க்கு மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை பொது நிதியிலிருந்து வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்:13</u>**

உசிலம்பட்டி நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சி அலுவலக கட்டிடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கும் பணிக்கு ரூ. 1.20 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.19, நாள். 28.06.2019–ல் அனுமதி பெற்றதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 30.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). M/s. K.P.K. Constructions என்பவர் மதிப்பீட்டை விட 0.28% குறைவு

1). திரு. பி.காட்டுராஜா என்பவர் மதிப்பீட்டை விட 1.00% அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. K.P.K. Constructions என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

---

**<u>மன்றப்பொருள்:14</u>**

உசிலம்பட்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலிருந்து வரும் குப்பைகளை உ.வாடிப்பட்டியில் உள்ள புதிய உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகின்றது. மேற்கண்ட இடத்தில் குப்பைகளை தேக்க பள்ளம் அமைக்க மண் வேலை செய்யும் பணிக்கு ரூ. 9.80 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.20, நாள். 28.06.2019–ல் அனுமதி பெற்றதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 30.07.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1). M/s. K.P.K. Constructions என்பவர் மதிப்பீட்டை விட 0.73% குறைவு

1). திரு. பி.காட்டுராஜா என்பவர் மதிப்பீட்டை விட 1.01% அதிகம்

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. K.P.K. Constructions என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. K.P.K. Constructions என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கலாம்.

நகராட்தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்(பொ)
உசிலம்பட்டி நகராட்சி.